இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 25-12-2024

# வெல்வோம் இருநூறு; படைப்போம் வரலாறு!

**“வெல்வோம் இருநூறு ; படைப்போம் வரலாறு” என்று முழங்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சொல்வதற்கான துணிச்சலும், தகுதியும் அவருக்கு உண்டு. அவர் தலைமைப் பொறுப்புக்கு வந்த பிறகு நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் நின்று, வென்று காட்டிய வெற்றி நாயகர் அவர் என்பதால்!**

**இலட்சோப லட்சம் தொண்டர்களுக்குத் தலைமை தாங்கும் தலைவர் என்ற தகுதியோடு இதனைச் சொன்னார் மாண்புமிகு தலைவர் அவர்கள்.”நம்மை எதிர்த்து மற்ற கட்சிகள் தனித்தனியாக வந்தாலும், கூட்டணியாக வந்தாலும் தி.மு.க. கூட்டணிதான் வெல்லும்” என்பதையும் உறுதியாகச் சொன்னார். இவை அனைத்தும் வெறும் நம்பிக்கை வார்த்தைகள் மட்டுமல்ல; கள உண்மையும் அதுதான் என்பதையும் சொன்னார் தலைவர் அவர்கள்.**

பழனிசாமி சொல்லி வரும் கப்சா கணக்கை முதலில் உடைத்து விட்டார் தலைவர் அவர்கள்.

“2019 நாடாளுமன்றத் தேர்தலில் 20 தொகுதிகளில் போட்டியிட்ட அ.தி.மு.க. 19.4 விழுக்காடு வாக்குகளை வாங்கியது. இதுவே 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 34 தொகுதிகளில் போட்டியிட்டும் வெறும் 20.4 விழுக்காடு வாக்குகள்தான் வாங்கியிருக்கிறது. 14தொகுதிகளில் அதிகமாகப் போட்டியிட்ட அ.தி.மு.க. நியாயமாகப் பார்த்தால் 32.98 விழுக்காடு வாக்கு களை 2024 தேர்தலில் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அதை விட 12.58 விழுக்காடு வாக்குகள் குறை வாகத்தான் வாங்கியிருக்கிறது.

எளிமையாகச் சொன்னால், 2019 இல் சராசரியாக ஒரு தொகுதிக்கு 4.16 லட்சம் வாக்குகள் வாங்கிய அ.தி.மு.க. 2024 இல் வெறும் 2.61 லட்சம் வாக்குகள்தான் வாங்கியிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும் சராசரி யாக 1.5 லட்சம் வாக்குகளை இழந்திருக்கிறது பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. இப்படி, மக்களால் நிராகரிக்கப்பட்டு ஓரங்கட்டப் பட்ட பழனிசாமி, அ.தி.மு.க. தொண்டர்களுக்குச் சாதாரண கூட்டல் வகுத்தல் கணக்கே தெரியாது என்று நம்பிப் பொய்க் கணக்கை அவிழ்த்துவிட்டிருக்கிறார். அவர் சொன்ன கணக்கை அடிப்படை அறிவுள்ள அ.தி.மு.க. காரர்களே கேட்டு சிரிக்கிறார்கள்” என்று சொல்லி பழனிசாமியின் பொய்க் கணக்கை உடைத்தார் தலைவர் அவர்கள்.

தி.மு.க. எந்தளவுக்கு பலம் பெற்றுள்ளது என்பதை 23.12.2024 தேதியிட்ட ‘தினமணி’யில் வெளியான கட்டுரை சொல்லி விட்டது. ‘200 இலக்கு; யாருக்குச் சாத்தியம்?’ என்ற தலைப்பில் பத்திரிக்கையாளர் பீ.ஜெபலீன் ஜான் ஒரு கட்டுரையை எழுதி இருக்கிறார். அதில் தி.மு.க.வின் வெற்றிக் கணக்கை மிகத் துல்லியமாகக் கணித்துக் காட்டிவிட்டார்.

‘தினமணி’ கட்டுரையாளர் சொல்கிறார்…

- **மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. கூட்டணி 2019, 2021, 2024 ஆகிய மூன்று பொதுத் தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளது. கலைஞர் தலைமையிலான கூட்டணி கூட இது போல மூன்று பொதுத் தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெறவில்லை.**
- **மூன்று பொதுத் தேர்தல்களில் ஒரே கூட்டணியை உடையாமல் அரவணைத்துச் செல்லும் பெருமையை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுள்ளார் என்பது தி.மு.க. கூட்டணிக்கு மிகப்பெரிய பலம்.**
- **தி.மு.க. கூட்டணியைப் பொறுத்தவரை 2019 இல் 53.15 விழுக்காடு, 2021 இல் 45.38 விழுக்காடு, 2024-இல் 46.97 விழுக்காடு என மூன்று முறையும் 45 விழுக்காடுக்கு மேல் பெற்று தேர்தல் களத்தில் வாக்கு பலத்தை நிரூபித்துள்ளது.**
- **தி.மு.க. கூட்டணியின் வாக்கு வங்கி தமிழ்நாடு முழுவதும் சீராக உள்ளது.**
- **2024 மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 23.05 விழுக்காடும், பா.ஜ.க. கூட்டணி 18.28 விழுக்காடும், நாம் தமிழர் 8.2 விழுக்காடும் பெற்றுள்ளன. தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணி இடையிலான வாக்கு வித்தியாசம் தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாதபடி 24 விழுக்காடாக அதிகரித்துள்ளது.**
- **அ.தி.மு.க. 7 தொகுதிகளில் டெபாசிட்டை இழந்துள்ளது. கன்னியாகுமரி (4.02 விழுக்காடு), திருநெல்வேலி (8.39 விழுக்காடு), ராமநாதபுரம் (8.99 விழுக்காடு), மத்திய சென்னை (9.80 விழுக்காடு) என 4 தொகுதிகளில் ஒற்றை இலக்கமாக வாக்கு வங்கி சுருங்கியது அ.தி.மு.க.வுக்கு மிகப் பெரிய பின்னடைவு.**
- **இப்போதைய நிலவரப்படி தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர், த.வெ.க. என ஐந்து முனைப் போட்டி ஏற்பட்டால் கொங்குமண்டலம், வட தமிழகத்தில் 72 தொகுதிகளில் மட்டுமே தி.மு.க. - அ.தி.மு.க. இடையே கடும் போட்டி உருவாகும். ஐந்து முனைப் போட்டியில் தி.மு.க. எதிர்ப்பு வாக்குகள் சிதறி 200 தொகுதிகளை தி.மு.க. அணி எட்ட முடியும்.**

என்று சொல்கிறது ‘தினமணி’.

அ.தி.மு.க.வுடன் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் சேர்க்கும் கணக்கை அந்தக் கட்டுரையாளர் சொல்லி இருக்கிறார். அப்படி ஒரு கூட்டணி அமைய வாய்ப்பில்லை என்பதை இரண்டு நாட்களுக்கு முன் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையே உறுதி செய்துள்ளார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 47 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. அ.தி.மு.க. கூட்டணி 23 விழுக்காட்டையும், பா.ஜ.க. கூட்டணி 18 விழுக்காட்டையும் பெற்றுள்ளது. அ.தி.மு.க.வின் விழுக்காட்டையும் பா.ஜ.க. விழுக்காட்டையும் கூட்டினால் 41 விழுக்காடு தான் வருகிறது. 47 ஐ தாண்டவில்லை. எனவே, பழனிசாமி எந்தக் கூட்டணி அமைத்தாலும் தோற்றுத்தான் போகப் போகிறார்.

தி.மு.க.வின் தலைமைச் செயற்குழுவில் மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரை என்பது நம்பிக்கை உரை மட்டுமல்ல; உண்மையான உரைதான் அது என்பதை உறுதி செய்துள்ளது ‘தினமணி”.

**வெல்வோம் இருநூறு;**
**படைப்போம் வரலாறு.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2024) தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, அந்தியூர் செல்வராஜ், கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, மரு.நா. எழிலன், த.வேலு, எஸ்.சுதர்சனம், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.எஸ்.பாரதி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### இலங்கைக் கடற்படையினர் அராஜகம்! சிறைப் பிடிக்கப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்களை விடுவித்திட விரைந்து நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவு அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, டிச.25-**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடயனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இராமேஸ்வரத்திலிருந்து மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், 17 மீனவர்கள் எல்லை தாண்டியதாகக் கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இந்நிலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்குமாறு கோரியும், மீனவர்கள் மீது தாக்குதல்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்குமாறும் வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (24.12.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் INDTN10MM206 மற்றும் INDTN10MM543 ஆகிய பதிவெண்கள் கொண்ட இரண்டு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் 24.12.2024 அன்று சிறை பிடிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில், 20.12.2024 அன்று இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத ஆறு நபர்களால், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இருவேறு சம்பவங்களையும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த மூர்க்கத்தனமான தாக்குதலில், இரண்டு நாட்டுப் படகுகளில் பயணித்த ஆறு மீனவர்களில், மூன்று மீனவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும், இந்தத் தாக்குதலின்போது, மீனவர்களது மீன்பிடிப் படகுகளில் இருந்த GPS கருவிகள், VHF கருவிகள், மீன்பிடி வலை, கையடக்கத் தொலைபேசி மற்றும் அவர்கள் பிடித்த மீன்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**மீனவர்கள் அச்சம்!**

இதுபோன்று அடிக்கடி நடக்கும் கைது மற்றும் தாக்குதல் சம்பவங்கள், பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் மீனவர்களின் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையையும், ஆபத்தையும் ஏற்படுத்துவதாக கவலையோடு குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2024 ஆம் ஆண்டில் மட்டும் 530 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 71 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக நடைபெற்று வரும் இத்தகைய சம்பவங்களும், தாக்குதல்களும் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழும் மீனவ மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாகக் கோடிட்டுக் காட்டி யுள்ளார்.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், எதிர்காலத்தில் தமிழக மீனவர்கள் மீது இதுபோன்ற தாக்குதல்கள் நடைபெறாமல் இருக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்குமாறும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### செல்லசேது.ரவிக்குமார் வரவேற்றார்! குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# கொள்ளிடம் மேற்கு ஒன்றியத்தில் இருதய அறுவை சிகிச்சைக்கான மருத்துவ முகாம்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*மயிலாடுதுறை, டிச. 25 -*

*மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கொள்ளிடத்தில் இருதய அறுவை சிகிச்சைக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.*

*மருத்துவ முகாம் தொடக்க விழாவில் கொள்ளிடம் மேற்கு ஒன்றியச் செயலாளர் செல்லசேது. ரவிக்குமார் வரவேற்றார்.*

*சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர் செல்வம், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன், மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், சீர்காழி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மு.தினேஷ் குமார், கொள்ளிடம் ஒன்றியக் குழு தலைவர் வி. ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மருத்துவ முகாமை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி தொடங்கி வைத்து இரத்த தானம் வழங்கியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.*

*மருத்துவ முகாமில் 853 பேர் பங்கேற்றனர். இதில் 321 பேருக்கு இ.சி.ஜி.யும், 196 பேருக்கு எக்கோ பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 26 பேருக்கு இருதய ஆபரேசன் செய்ய பரிந்துரைக்கப்பட்டு அதற்கான ஏற்பாடும் கொள்ளிடம் ஒன்றிய தி.மு.க. சார்பில் செய்யப்பட்டது. முகாமில் 75 பேர் இரத்தத்தை தானமாக வாங்கினார்.*

*இரத்தம் தானமாக வழங்கியவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. சான்றிதழ்களை வழங்கினார்.*

*முகாமில் குத்தாலம் பி.கல்யாணம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் கே.அசோக்குமார், சுசிலா நாகலிங்கம், பி.செந்தில் குமார், பொருளாளர் டி. சண்முகம், மாவட்டப் பிரதிநிதிகள் பி.செந்தாமரைக் கண்ணன், எஸ்.கே.ராஜா, ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சி.எம்.தீலிபன், அமிர்த. விஜயகுமார், ஆர்.விஜய பிரபாகரன், சி.கனகராஜ், எஸ்.பிரபாகரன், ஏ.கலைவேந்தன், என்.சதீஷ், டி. பிரபு மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக முன்னணி யினர் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.*



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.12.2024) சென்னை, பெரம்பூர், டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில், திராவிட முன்னேற்றக் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில், கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்த குழந்தையை மடியில் வைத்து கொஞ்சி மகிழ்ந்தார்.